பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 25 சனிக்கிழமை 06.02.2021 கதிர் 324

## ஆயுதப் போராட்டத்தின் இலக்கை ஜெனிவா மூலம் அடைய முயற்சி!

### பதறுகின்றது விமலின் கட்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டம் மூலம் அடைய முயற்சித்த இலக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தீர்மானங்கள் ஊடாக புலம்பெயர் அமைப்புக்கள் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றன.

2

# யாழ். மாவட்டத்தை முழுமையாக முடக்க சகலரும் ஓரணியில் அணிதிரளுங்கள்!

### மன்னாரில் சாணக்கியன் எம்.பி. பகிரங்க அழைப்பு





யாழ்ப்பாணம் மாவட்டத்தை முழுமையாக முடக்க அனைவரும் ஓரணியில் அணிதிரள வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சிப் பேரணி மன்னார் நகருக்குள் நுழைந்து மத்திய பஸ் நிலையத்தை இன்று பிற்பகல் சென்றடைந்தது.

2

## யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகள்



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ்பேசும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்துக்கு நாளை யாழ்ப்பாணத்தில் மக்கள் பேரெழுச்சியை ஏற்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மருதனார்மடம் சந்தையில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட

2

# மன்னாரிலிருந்து கிளிநொச்சி நோக்கி மக்கள் வெள்ளத்துடன் பேரணி பயணம்

### நாளை வருகின்றது யாழ்ப்பாணம்

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ் பேசும் சமூகத்தின் மாபெரும் எழுச்சிப் பேரணி மன்னாரில் இருந்து வெள்ளாங்குளம், மல்லாவி ஊடாக கிளிநொச்சி நோக்கிப் பயணிக்கின்றது.

நான்காம் நாளான இன்று வவுனியாவில் இருந்து காலை மன்னார் நோக்கிப் பயணித்த பேரணி, நண்பகல் 12 மணியளவில் மன்னார் மடுச் சந்தியை அடைந்தது. அதன்பின்னர் அங்கிருந்து முருங்கன் ஊடாக மன்னார் நகர் நோக்கிச் சென்றது.

2



## கோட்டா தலைமையில் இனவாத இராச்சியம்!

### பேரெழுச்சிப் பேரணியில் மனோ சீற்றம்



கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இனவாத இராச்சியம் உருவாகியுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

2




## எமது உடலை எரிக்காதே!

**'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' நீதி கோரி - உரிமை கேட்டுக் களமிறங்கியுள்ள சிறுவன்....**

## 68 ஆயிரத்தைத் தாண்டியது கொரோனாத் தொற்றாளர்!

கொழும்பு, ஜன.06

இலங்கையில் மேலும் 343 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 68 ஆயிரத்து 193 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 62 ஆயிரத்து 594 பேர் குணமடைந்துள்ளனர்.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 64 ஆயிரத்து 192 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

## வவுனியாவில் வியாபாரிகள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா மொத்த மரக்கறி வியாபார சந்தையை பொலிஸார் திறக்க விடாதமையால், வீதியை மறித்து வியாபாரிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை இடைநிறுத்தம்; பாடசாலைப் பரீட்சை முடிவுகளின்படியே புள்ளி

### பரீட்சைகள் திணைக்களம் தீர்மானம்

இலங்கையில் நிலவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை இடைநிறுத்தப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர், பாடசாலையில்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வவுனியாவில் வியாபாரிகள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள வவுனியா தினசரி சந்தை கடந்த சில நாட்களாக கொரோனோத் தாக்கம் காரணமாக மூடப்பட்டிருந்ததுடன் காமினி மகா வித்தியாலயம் மற்றும் கண்டி வீதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது.

இதேவேளை, சந்தையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் எவருக்கும் தொற்று அடையாளம் காணப்படவில்லை.

அத்தோடு மீண்டும் சந்தையைத் திறப்பதற்கு சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்ததுடன் நகர சபையின் ஏற்பாட்டில் நேற்று சந்தையில் தொற்று நீக்கமும் செய்யப்பட்டது.

இந்தநிலையில், இன்று சந்தையைத் திறப்பதற்காக வர்த்தகர்கள் வருகை தந்த போது பொலிஸார் சந்தையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் பொலிஸாருக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

நீண்ட நேரமாகியும் தீர்வு கிடைக்காமையால் ஹொறவப்பொத்தானை பிரதான வீதியை வழிமறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்தின ஆகியோர் அவர்களுடன் கலந்துரையாடினர்.

இதையடுத்து, ஏனைய சில ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை விரைவாகச் செய்துவிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சந்தையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய போராட்டம் கைவிடப்பட்டது.

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்ற பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் புள்ளிகளைப் பெற்று அதன் அடிப்படையில் முடிவுகளை அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தரம் 10 இல் மூன்று தவணைகளிலும், தரம் 11இல் இரு தவணைகளிலும் பெறப்பட்ட மதிப்பெண்களைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும் என அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும், கல்வி வலயங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடத்த கல்வி அமைச்சு முன்னர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது அங்கு கருத்து வெளியிடும்போதே சாணக்கியன் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

மன்னாரில் கிடைத்த பாரிய ஆதரவு கண்டு தாம் நெகிழ்ச்சியடைந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட மக்கள் உணர்ச்சிப் பெருக்குடன் குறித்த பேரணியில் பங்கேற்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## கோட்டா தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று மன்னார் பஸ் நிலையத்துக்கு முன்னால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரணியில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களும் முஸ்லிம்களும் இந்தத் தேசத்தில் வாழ்வதற்கான உரிமை கொண்டவர்கள். வரலாற்றில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்பதற்கான குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டு இருக்கின்றது.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு கோட்டாபய அரசு இனவாத இராச்சியத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றது. இது கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடந்துகொண்டு இருக்கின்றது .

இந்த அடக்குமுறைக்கு எதிராக தமிழர்களும் முஸ்லிம்களும் அணிதிரண்டு இருக்கின்றார்கள். என்றும் துணையாக நாம் களமிறங்கியுள்ளேன் - என்றார்.

## யாழ்ப்பாணத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த விழிப்புணர்வு நடவடிக்கை, யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் சசிகலா ரவிராஜ் உள்ளிட்டோர் இந்த விழிப்பூட்டல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ்பேசும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம் கடந்த 3 ஆம் திகதி பொத்துவிலில் ஆரம்பமாகியதோடு, பேரணியின் 4 ஆம் நாளான இன்று வவுனியாவில் ஆரம்பமாகி மன்னார் நோக்கிச் சென்று கிளிநொச்சி நோக்கிப் பயணித்துள்ளது.

இந்தப் போராட்டம் மக்களின் பேரெழுச்சியுடன் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

## மன்னாரிலிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது, பிரதான வீதிகளில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளில் பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்ட நிலையில் பல்வேறு தடைகளையும் தாண்டி குறித்த பேரணி மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகரைச் சென்றடைந்தது.

மன்னார் பிரதான பாலத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் கட்டளையையும் பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் அறியப்படுத்தினர்.

அத்துடன், பேரணியாக வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் இலங்கங்களையும் பொலிஸார் பதிவு செய்த பின்னர் மன்னார் நகரப் பகுதிக்குள் செல்ல அனுமதித்தனர். மன்னார், பிரதான பாலத்தில் இருந்து மன்னார் நகரப் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலையடி வரை குறித்த பேரணி சென்றது.

தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் சர்வதேசத்திடம் நீதி கோரியும் முன்னெடுக்கப்படும் இந்தப் பேரணியில், சர்வமதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்பேசும் மக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டுள்ளனர்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களின் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள் ஆகியோரும் பேரணியில் பங்கேற்றுள்ளனர்.

மேலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள பெருந்திரளான முஸ்லிம் மக்களும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்துகொண்டனர்.

இந்நிலையில், குறித்த பேரணி மன்னாரிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணிக்கின்றது. நாளை காலை கிளிநொச்சியிலிருந்து பொலிகண்டி வரைப் பயணிக்கவுள்ள பேரணியில் பங்கேற்க கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் மக்கள் தயாராகியுள்ளனர்.

## ஆயுதப் போராட்டத்தின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இம்மாதம் இடம்பெறவுள்ள 46ஆவது கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும். முன்னைய காலங்களில் மனித உரிமைகள் ஆணையாளர், இராணுவத்தினருக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தார்.

ஆனால், தற்போது அரசுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். இலங்கை தொடர்பில் அவர் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கை நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

முப்பது வருட கால யுத்தம் முழு நாட்டுக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. பெரும் போராட்டத்துக்கு மத்தியில் யுத்தம் 2009 மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த அரசு புலம் பெயர் அமைப்புக்களுக்கும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் முன்னுரிமை வழங்கியது. இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அரச தலைவர்களுக்கும் நாடாளுமன்றுக்கும் அறிவிக்காமல் இணை அனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசில் சர்வதேச அமைப்புக்களின் நோக்கங்கள் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுத்தப்பட்டன. அரசியல் நோக்கங்களை கொண்டு பாதுகாப்பு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் சிறைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டதால்தான் கடந்த அரசை மக்கள் புறக்கணித்தனர். இதேவேளை, நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சர்வதேச அமைப்புக்களுக்கு அடிபணியப் போவதில்லை என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்திலிருந்து அரசு விலகிக்கொண்டமை முதற்கட்ட செயற்பாடாகும்.

ஆகவே, இம்மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத் தொடர் தீர்மானமிக்கமாகக் காணப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஆயுமேந்தி போராடியதன், இலக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் பிரேரணைகள் மூலம் புலம்பெயர் அமைப்புக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றார்.

போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை எனச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் கவனம் செலுத்தவில்லை. ஆகவே, குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை இம்முறை அரசு பகிரங்கப்படுத்தும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எழுச்சியை ஏற்காது தெற்கு

**இலங்கையின் ஆட்சி அதிகாரப் பீடத்தைப் பொறுத்தவரை சில விடயங்கள் மட்டும் அதன் காதில் ஏறுவதில்லை.**

**அந்த ஆட்சிப் பீடங்களினால் தொடர்ந்து அடக்கி, ஒடுக்கப்பட்டு வரும் சிறுபான்மையினரான தமிழர்கள் தரப்பின் நியாயப்பாடுகள், வாதங்கள் மட்டும் அவற்றின் காதுகளில் வீழ்வதில்லை. அவை எருமை மாட்டின் மீது பொழிந்த மழை மாதிரியோ, புறக்குடத்து நீராகவோ அவமாகிப் போகின்றமைதான் வழமை.**

**பெரும் எழுச்சியுடன் சிறுபான்மையினரான தமிழ் பேசும் சமூகத்தினர் முன்னெடுக்கும் 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான' அரசியல் பேரணி தொடர்பில் தமிழர் தரப்பில் குரல் கொடுக்கக் கூடியவரான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கும் யதார்த்தப் புற நிலைமை பற்றிய கருத்தும் இப்படித்தான் இலங்கை ஆட்சிப் பீடத்தைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகக் கேட்காமல்தான் போயிருக்கும் என்று நம்பலாம்.**

**"இந்தப் பேரணி சிறுபான்மை மக்கள் தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கும் பேரணியேயன்றி, இது பெரும்பான்மையினருக்கு எதிரான பேரணியல்ல." – என்று சுமந்திரன் விளக்கியிருக்கின்றார்.**

***"சிறுபான்மையினருக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்படும் பாகுபாடான – புறமொதுக்குகின்ற – இலக்கு வைத்து அழித்தொழிக்க முயலுகின்ற – நடவடிக்கைகளைக் கண்டித்தும் சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே இந்த எழுச்சி பேரணியை மேற்கொள்கின்றோம்.***

***"இந்தப் பேரணி பெரும்பான்மை மக்களுக்கு எதிரானதல்ல. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்" – என்றும் சுமந்திரன் கூறியிருக்கின்றார். அதற்கு மேலும், பேரணியின் நோக்கம் குறித்து அவர் விளக்கமும் தந்திருக்கின்றார்.***

***"இந்த நாட்டில் சிங்கள, பௌத்த மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழ்ப் பேசும் மக்களாகிய எங்களுக்கும் உண்டு. ஏனெனில் நாங்களும் இந்த நாட்டுக் குடிமக்கள். எங்களுக்கும் இந்த நாடு சொந்தமானது. நாங்களும் காலங்காலமாக – பாரம்பரியமாக – இங்கு வசிக்கின்றோம். எங்களைப் போன்றே பெரும்பான்மை மக்களும் இந்த நாட்டில் நீண்ட காலமாக வசிக்கின்றார்கள். இந்த நாட்டில் வசிப்பதற்கான முழு உரிமையும் அவர்களுக்கு உள்ளது. அதேசமயம், இந்த மண்ணின் தமிழ்ப் பேசும் சமூகமும் தனித்துவச் சிறப்புகளோடு வாழ்ந்து வருகின்றது.***

***"பெரும்பான்மை இன மக்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் உள்ளது. அதை உலகுக்குப் பறைசாற்றி, உண்மையை அம்பலப்படுத்தும் விதத்திலேயே இந்த எழுச்சி ஊர்வலம் – பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி – எமது மக்களால் முன்னெடுக்கப்படுகின்றது"*** **– என்று சுமந்திரன் விளக்கியிருக்கின்றார்.**

**ஆனால் தமிழ் பேசும் சமூகத்தின் இந்த ஒன்றுபட்ட எழுச்சிப் பேரணி பற்றிய சுமந்திரனின் விளக்கம் – உண்மை நிலைமை – சிங்களத்தின் காதுகளில் விழப் போவதில்லை.**

**இந்த இலங்கைத் தீவு சிங்கள, பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது என்று தனியுரிமை கொண்டாடும் சிங்கள ஆட்சிப் பீடத்தின் மனவமைப்பு (Mindset) மாறப் போவதில்லை.**

**அந்தத் தனியுரிமைக்கு – தனியுரித்துக்கு – சவால் விடும் நடவடிக்கையாகவே இந்த எழுச்சிப் பேரணியை தென்னிலங்கை சிங்களம் நோக்கும்; நோக்குகின்றது.**

**அதுவும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டவும் வலியுறுத்தவுமான எழுச்சிப் பேரணி என்று ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை தமிழ்ப் பேசும் மக்களின் எழுச்சி நிகழ்வாக மாறியிருக்கின்றது.**

**தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபடும் புத்தெழுச்சிக்கான புதிய ஆரம்பத்தை – அத்தியாயத்தை – அது தொடக்கி வைத்திருக்கின்றது.**

**இந்த எழுச்சிப் பேரணியில் பங்குகொள்வோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசனும் அறிவித்திருக்கின்றார்.**

**ஏற்கனவே இந்த எழுச்சிப் பேரணியில் முஸ்லிம்களும் சங்கமித்துள்ளனர். இப்போது மலையகத் தமிழ்த் தலைமையும் அதில் ஒன்றிணைகின்றது.**

**இந்த முத்தரப்பு ஒன்றிணைவில் இலங்கையின் கால் பங்கினார் – இருபத்தியைந்து வீதத்தினர் – ஒன்று சேரும் அருமையான வாய்ப்புக் கிட்டியுள்ளது.**

**தமிழ் பேசும் சமூகமாக அவர்கள் ஒன்றிப்பார்களாயின் தென்னிலங்கைச் சிங்களத்தின் ஆதிக்க அடக்கு முறை நடவடிக்கைகளுக்கு – மேலாண்மைத் திமிர்ப் போக்குக்கு – நிரந்தர ஆப்பு வைக்கும் அதிக கைங்கரியமாக அது மாறும்.**

**இந்த எழுச்சிப் பேரணி மூலம் அத்தகைய ஒன்றிப்பு வலுவாக வேரூன்றி வெளிப்படும் சூழல் தென்படுகின்றது.**

**அதனால் இந்த எழுச்சிப் பேரணியை தென்னிலங்கை சிங்களத்துக்கும், அந்த பௌத்த, சிங்கள பேரினப் போக்கை முன்னெடுக்கும் அரசுக்கும் எதிரான குற்றவியல் நடவடிக்கையாகவே தெற்கு நோக்கும். அதன் விளைவுகளை எழுச்சிப் பேரணி ஏற்பாட்டாளர்கள் எதிர்கொள்ள வேண்டி வருவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.**

## இந்தியாவுடனான புரிந்துணர்வை பரஸ்பர பேச்சு மூலம் தீர்க்கலாம்!

### மஹிந்த நம்பிக்கை

இந்தியா இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு என்பதால் எந்தவொரு பிரச்சினையையும் பரஸ்பர பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனைய பிரச்சினையைக் கூட ஒருவருக்கொருவர் கலந்துரையாடுவதன் மூலம் தீர்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனோ அல்லது வேறு எந்த நாட்டினருடனோ இணைந்து கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதில்லை என இலங்கை முடிவு செய்த நிலையில் இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



## யாழ்.பல்கலை நினைவுத் தூபிக்கு முள்ளிவாய்க்காலில் மண்சேகரிப்பு!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மீள அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்காக முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து மண் சேகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு மண் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி போராட்டம் நேற்று முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் நினைவுத் திடல் வரை சென்றதுடன் போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்காக அங்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நினைவிடத்தின் மண், மாணவர்களால் சேகரிக்கப்பட்டதுடன் இதில், வேலன் சுவாமிகள், கிறிஸ்தவ மதகுரு லியோ ஆம்ஸ்ரோங் மற்றும் சிலர் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அண்மையில் இடித்தழிக்கப்பட்ட நிலையில், கடும் எதிர்ப்பலையையடுத்து இந்த இடத்தில் மீண்டும் அதே நினைவுத் தூபி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 164 இலங்கையர் நாடு வந்தடைவு!

தொழில் நிமித்தம் சீஷெல்ஸ் நாட்டுக்குச் சென்று, கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் இருந்த 164 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் – 708 விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு வந்தடைந்துள்ளனர்.

வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் அரசாங்கத்தின் விசேட வேலைத் திட்டத்துக்கமைய இவர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த அனைவரும் முப்படையினரால் நடத்தப்படும் கொரோனா தடுப்பு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனக் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிழக்கு தொல்பொருள் செயலணிக்கு 5 பேர் புதிதாக நியமிக்கப்பட்டனர்!

கிழக்கு தொல்பொருள் ஜனாதிபதி செயலணியில், சிறுபான்மையினரையும் நியமிக்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அந்தச் செயலணிக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மேலும் 5 பேரை அரசாங்கம் நியமித்துள்ளது.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் மூத்த பேராசிரியர் அனுர மானதுங்க, காணி ஆணையர் நாயகம் கீர்த்தி கமகே, சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.நந்தனா சேனதீர மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அசின்சல சேனவிரத்ன ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது இந்த செயலணியில் அங்கம் வகித்த ஐந்து உறுப்பினர்களில் சிலர் ஓய்வு பெற்றமை மற்றும் இடமாற்றம் பெற்றமையால் புதிய நியமனங்கள் நடைமுறைக்கு வருவதாக வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் ஜனாதிபதி செயலணி கடந்த 2020 ஜூன் முதலாம் திகதி, ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் முஸ்லிம்களை இணைக்கும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனால் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் பெயர் பட்டியலொன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அந்த பட்டியல் தொடர்பாக அரசாங்கம் இதுவரை கவனம் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எழுச்சிப் பேரணியில் கலந்த வாகனங்களின் இலக்கங்களைப் பதிவு செய்தனர் பொலிஸார்!

போராட்டத்துக்கு ஆதரவளிப்பவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கங்களை வவுனியாவில் பொலிஸார் பதிவுசெய்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மூன்றாம் நாள் எழுச்சிப் பேரணி திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு ஊடாகச் சென்று வவுனியாவில் நிறைவடைந்துள்ளது.

இந்தப் பேரணி, புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு 8.30 மணியளவில் நிறைவடைந்தது.



இதன்போது, பேரணிக்கு ஆதரவு தெரிவித்துச் சென்ற பொதுமக்களின் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களை பொலிஸார் பதிவுசெய்துள்ளனர்.

# அரசும், விவசாயிகளும் அமைதி காக்க வேண்டும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் வலியுறுத்தல்



இந்தியாவில் விவசாய திருத்த சட்டங்களுக்கு எதிராக டெல்லியில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். 21/2 மாதங்களுக்கு மேல் போராட்டம் நீடித்து வருகிறது.

குடியரசு தினத்தன்று விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் வன்முறை ஏற்பட்டது. போலிஸ் தடியடி மற்றும் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர்.

விவசாயிகளும் மத்திய அரசும் நடத்திய 11 சுற்று பேச்சுகளும் தோல்வியில் முடிந்தது. இதற்கிடையே டெல்லியில் நடந்து வரும் விவசாயி கள் போராட் டங்கள் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள் ளது. அமைதியான போராட்டத்துக்கு பிரபலங்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேபோல ஐ.நா. சபையும் தனது கருத்தை தெரிவித்து இருந்தது. இந்த நிலையில் இந்திய அரசும், விவசாயிகள் அமைதி காக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமை கவுன் ஸில் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:-

டெல்லியில் நடந்து வரும் விவசாயிகள் போராட்டத்தில் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைப் பிடிக்க இரு தரப்பினரையும் (இந்திய அரசு, விவசாயிகள்) கேட்டுக்கொள்கிறோம்.

போராட்டங்கள் அமைதியான முறையில் நடத்தப்பட வேண்டும். இரு தரப்பினரும் அமை தியை உறுதி செய்ய வேண்டும். அனைவருக்கும் மனித உரிமைகள் வழங்கும் வகையில் சமமான தீர்வுகளை கண்டறிவது மிகமுக்கியம் என்று தெரி வித்துள்ளது.

## திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 500 கோவில்கள் கட்ட ஏற்பாடு

திருப்பதியில் தேவஸ்தான தலைமை அலுவலகத்தில் தொலைபேசி மூலம் பக்தர்கள் குறைகேட்பு நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் பங்கேற்று பக்தர்களின் கேள்விகளுக்கு தேவஸ்தான செயல் அதிகாரி ஜவஹர்ரெட்டி பேட்டியளித்தார்.

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு 10 நாட்கள் திறக்கப்பட்ட சொர்க்கவாசல் வழியாக 4.26 லட்சம் பக்தர்கள் தரி சித்தனர். மார்கழி மாதத்தில் பல ஆன்மீக நிகழ்ச்சி திருப்பதி, திருமலையில் நடத் தப்பட்டன. திருப்பதியில் உள்ள தேவஸ் தான ஆயுர்வேத பல்கலைக்கழக வளாகத்தில் பஞ்சகவ்யத்தை (பால், தயிர், நெய், சாணம், கோமூத்திரம்) பயன்படுத்தி மதிப்பு கூட்டு பொருள்கள் உற்பத்தி செய்ய திட்ட அறிக்கை தயார் செய்யப் பட்டுள்ளது.

வருகிற 19 ஆம் திகதி ரத சப்தமியன்று சூரிய ஜெயந்தி உற்சவம் திருமலையில் நடைபெறுகிறது. அன்று காலை முதல் இரவு வரை 7 வாகனங்களில் ஏழுமலை யான் மாடவீதியில் பவனி வந்து பக் தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

அன்றைய தினம் தரிசன டிக்கெட் மற்றும் டோக்கன்கள் உள்ளவர்கள் மட்டுமே திருமலைக்கு செல்ல அனும திக்கப்படுவார்கள்.

மாசி மாதம் திருமலையில் உள்ள நாதநீராஜன மண்டபத்தில் காலை 6 மணி முதல் 6.40 மணி வரை விஷ்ணு புராய சொற்பொழிவு நடத்தப்படும்.

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் ஆன்லைனில் வர்ச்சுவல் கல்யாண உற்சவம் நிகழ்ச்சி ஆரம்பிக் கப்படவுள்ளது. இதற்காக வருகின்ற 19 ஆம் திகதி இணையதளத்தில் டிக்கெட் டுகள் வெளியிடப்பட உள்ளன.

திருமலையில் கொரோனாவை யொட்டி நடத்தப்பட்ட வேதபாராயணங்கள் 300 நாட்களை எட்டியுள்ளது. தெலுங்கு வருட பிறப்பன்று (ஏப்.13) கன்னட, ஹிந்தி மொழிகளில் தேவஸ்தான தொலைக் காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

தெலுங்கு மொழி பேசும் மாநிலங் களில் 500 கோவில்களை கட்ட தேவஸ் தானம் திட்டமிட்டுள்ளது.

## விமானத் தயாரிப்புத் தொழிலில் இணைந்து செயற்பட உடன்பாடு



விமானத் தயாரிப்புத் துறையில் இணைந்து செயல்படுவதற்காக அமெ ரிக்காவின் லாக்கீட் மார்ட் டின் நிறுவனமும், இந்துஸ் தான் ஏரோநாட்டிக்ஸ் நிறு வனமும் உடன்பாடு செய் துள்ளன.

லாக்கீட் மார்ட்டின் நிறு வனம் போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது. இந்திய விமானப்படைக்கு 114 போர் விமானங்களை வாங்குவதற்கு விவரங்களைக் கோரும் பெறுகை கோரப்பட்டுள்ளது.

இந்தப் பெறுகைக்காக லாக்கீட் மார்ட்டின், போயிங், டசால்ட், யூரோபைட்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இந்தியாவில் விமானத் தயாரிப்புத் தொழிலில் காலூன்றுவதற்காக அரசுத் துறையைச் சேர்ந்த இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் லாக்கீட் மார்ட்டின் நிறுவனம் உடன்பாட்டில் கையொப்பமிட்டுள்ளது.

## மும்பை தனியார் கடைத் தொகுதியில் தீ 20 மணி நேரத்திற்கு பின் அணைப்பு



மும்பையில், பழைய பொருட்கள் சேமிப்பு குடோனில் பயங்கர தீ விபத்து, சுமார் 20 மணி நேர தொடர் போராட்டத்திற்கு பின் னர் அணைக்கப்பட்டுள்ளது.

மும்பையின் புறநகர் பகுதி யான மன்கூர்டு (Mankhurd) என்ற இடத்தில் உள்ள அந்த பழைய பொருள்கள் சேமிப்பு கிடங் கில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது.

19 தீயணைப்புத்துறை வாக னங்கள், 11 தண்ணீர் லொறிகள் மூலம், தீயை அணைக்கும் பணி நடைபெற்றது. இருப்பினும், கட்டுக்கடங்காமல் கொளுந்து விட்டு எரிந்த தீ, சுமார் 20 மணி நேரத்திற்கு பிறகு, சனிக்கிழமை பிற்பகலில் தான், முழுவதும் அணைக்கப்பட்டது.

## சசிகலாவின் வருகை; அ.தி.மு.க. நிர்வாகிகள் மனு

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைதண்டனை நிறை வடைந்து கடந்த 27 ஆம் திகதி சசிகலா விடுதலையான நிலையில், நாளை மறுநாள் அவர் சென்னை வர உள்ளார். சசிகலாவை வர வேற்பதற்காக அ.ம.மு.க கட்சியினர் தீவிர ஏற்பாடுகள் செய்து வருகின் றனர்.

சசிகலா வருகையை முன்னிட்டு அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் வாழ்த்து போஸ்டர்களை ஒட்டி வருகின்றனர். சசிகலா நாளை மறுநாள் வரும் போது, சென்னையில் பேரணி நடத்த அ.ம.மு.க. திட்டமிட்டுள்ளதாக தெரி கிறது.

இந்சூழலில் முன்னாள் அமைச் சரும், அ.ம.மு.க. துணை பொதுச் செயலாளருமான செந்தமிழன் சார்பில், சென்னையில் போரூர் முதல் 12 இடங்களில் சசிகலாவுக்கு வரவேற்பு அளிக்கவும் பேரணி நடத்தவும் அனுமதி கேட்டு சென்னை காவல்துறையில் மனு அளிக்கப் பட்டது.

மேலும் சசிகலா தலைமையில் நடத்தப்படும் பேரணியில் 5 ஆயிரத் திற்கும் அதிகமானோர் பங்கேற் பார்கள் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜெயலலிதா நினைவிடம் வரை சசிகலா தலை மையில் பேரணி செல்ல திட்டமிட்டுள் ளதாகவும் கூறப்படுகிறது. இந்த மனுவை பரிசீலித்து சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் டிஜிபியிடம் அ.தி. மு.க. முக்கிய நிர்வாகிகள் மீண்டும் மனு அளித்துள்ளனர். இன்று காலை அ.ம.மு.க. சார்பில் காவல்துறை யிடம் மனு அளித்த நிலையில், அ.தி.மு.க. சார்பில் இந்த மனு அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக சசிகலா காரில் அ.தி.மு.க. கொடியை கட்ட எதிர்ப்பு தெரிவித்து ஏற்கனவே அ.தி.மு.க.வினர் புகார் அளித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் உள்நாட்டு இணைய சேவையை நிறுத்தும் "பே பால்" நிறுவனம்!




உலகின் மிகப்பெரிய இணையத்தளக் கொடுப்பனவு நிறுவனமான பே பால் நிறுவனம் இந்தியாவில் உள்நாட்டுப் கொடுப்பனவு சேவையை நிறுத்த முடிவு செய்துள்ளது.

அமெரிக்க நிறுவனமான பே பால் நிறு வனம், இந்தியாவில் தனது அலுவலகங்களை நிறுவி பல ஆண்டுகளாக இணையத்தளக் கொடுப்பனவு சேவையை வழங்கி வருகிறது.

இந்த நிலையில், வருகிற ஏப்ரல் முதலாம் திகதி முதல் தனது உள்நாட்டுப் கொடுப்பனவு சேவையை முழுமையாக நிறுத்திவிட்டு, முழுநேரமாக இந்தியர்களுக்கும், இந்திய நிறு வனங்களுக்குமான வெளிநாட்டுப் கொடுப் பனவு சேவைகளில் கவனத்தைச் செலுத்த உள்ளதாக பேபால் இந்திய வர்த்தகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மக்களுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் பக்கபலமாக நிற்பதே இந்திய நீதித்துறை

### பிரதமர் மோடி புகழாரம்



மக்களுக்காகவும் நாட்டின் நலனுக் காகவும் பக்கபலமாக நிற்பதே இந்திய நீதித்துறை என பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

குஜராத் உயர்நீதிமன்ற வைர விழா நிகழ்ச்சியில் காணொலி மூலம் பிரதமர் மோடி உரையாற்றினார். குஜராத் உயர்நீதி மன்றம் உண்மையையும் நீதியையும் காப்பாற்ற எப்போதும் பாடுபடுவதாக பாராட்டு தெரிவித்தார். நமது நீதித்துறை, அரசமைப்புச் சட்டத்திற்கு நேர்மறையா கவும் புதுமையாகவும் பொருள்விளக்கம் கொடுத்து அதை மேலும் வலிமைப் படுத்துவதாகவும் அவர் கூறினார்.

எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்திய சமூகத்தில் சட்டத்தின் ஆட்சியே கலாசார அடிப்படையாக இருப்பதாகவும் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

# வெறுங்காலுடன் 104 நிமிடங்கள் பனிக்கட்டிகள் மீது ஓடிச் சாதனை



நோர்வே நாட்டை சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர் ஒருவர் உறைந்த பனிக்கட்டிகள் மீது ஒரு மணி நேரம் 44 நிமிடங்கள் வெறுங்காலுடன் ஓடி சாதனை படைத்துள்ளார்.

Jonas Felde Sevaldrud என்ற அந்த ஓட்டப்பந்தய வீரர், "born to run" என்ற புத்தகத்தின் மூலம் ஈர்க்கப்பட்டு, சாதனை படைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

உறைந்த பனிக்கட்டிகள் மீது வெறுங்காலுடன் சுமார் 2 மணி நேரம் ஓடிய இவர், கின்னஸ் சாதனைக்கும் விண்ணப்பித்தோடு, அடுத்த கட்ட முயற்சியாக, உலக சாதனையை முறியடிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# முக்கிய உளவுத் தகவல்களை டிரம்புக்கு வழங்கக் கூடாது

## அதிபர் பைடன் உத்தரவு



முன்னாள் அதிபர் என்ற வகையில், உளவுத்துறை தகவல்கள் டிரம்புக்கு வழங்கப்படக் கூடாது என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்க அரசு நிர்வாகத்தில் மிகமுக்கியமான உளவுத்துறை தகவல்களை முன்னாள் அதிபர்களுக்கு தெரிவிக்கும் வழக்கம் உள்ளது.

ஆனால் தாறுமாறாக நடந்துகொள்ளும் ட்ரம்புக்கு அது தேவையில்லை என தான் நினைப்பதாகக் கூறியுள்ள ஜோ பைடன், அவருக்கு எந்த மதிப்பீட்டின் உளவுத்தகவல்களை தெரிவிப்பது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

டிரம்புக்கு தெரிவித்தால், உளவுத் தகவல்களை வெளியே கசியவிட்டு, அதுபற்றி ஏதாவது கமெண்ட் அடிப்பதைத் தவிர, வேறு என்ன பலன் விளையப் போகிறது என்றும் தனியார் தொலைக்காட்சி பேட்டியில் ஜோ பைடன் கூறியுள்ளார்.

# வலிப்பால் துடித்த எஜமானரை சாதுர்யமாக காப்பாற்றிய நாய்



அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாகாணத்தை சேர்ந்தவர் பிரைன். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு, அதே மாகாணத்தில் உள்ள விலங்குகள் காப்பகத்திலிருந்து ஜேர்மன் ஷெப்பர்ட் நாய் ஒன்றைத் தத்தெடுத்து வளர்த்து வந்தார்.

சேடி என்று பெயரிடப்பட்ட அந்த நாயின் முதல் எஜமானர், வேறு மாகாணத்துக்கு இடம்பெயர்ந்தபோது, விலங்குகள் காப்பகத்தில் சேடியைச் சேர்த்தார். உரிமையாளரைப் பிரிந்து காப்பகத்தில் தனிமையில் தவித்து வந்த சேடியை பிரைன் தத்தெடுத்து வீட்டுக்கு அழைத்து சென்றார்.

தன்னை தனிமையிலிருந்து மீட்ட பிரைனிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தது சேடி. அதே போல் பிரைனும் சேடி மீது மிகுந்த பாசம் வைத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இரவு நேரத்தில் வீட்டில் யாருமில்லாத போது பிரைனுக்குத் திடீரென வலிப்பு ஏற்பட்டது. சத்தம் கேட்டு, பிரைனின் அறைக்குச் சென்ற சேடி, தனது எஜமானர் கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்து அவருக்கு உடல்நலம் சரியில்லை என்பதை உணர்ந்தது. பின்னர் பிரைன் மயங்காமல் இருக்க அவர் முகத்தை நாக்கால் நக்கியது. மேலும், நகர முடியாமல் தவித்த பிரைனின் சட்டையைக் கவ்விக் கொண்டு செல்போன் இருக்கும் இடத்திற்கு இழுத்துச் சென்றது.

இதனால் அவரால் அவசர எண்ணிற்கு தொடர்புகொண்டு உதவி கேட்க முடிந்தது. அதன்படி அம்புலன்சில் வந்த மருத்துவ ஊழியர்கள் பிரைனை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். தற்போது பிரைன் நலமாக உள்ளார்.

இதற்கிடையில் உள்ளூரை சேர்ந்த விலங்குகள் மீட்பு குழு ஒன்று தனது பேஸ்புக் பக்கத்தில் சேடியின் புகைப்படத்துடன் அது தனது எஜமானரை காப்பாற்றியது பற்றி பதிவிட்டது. அடுத்த சில மணி நேரத்தில் இந்த பதிவு மிகவும் வைரலானது. பலரும் சேடியை பாராட்டி கருத்துகளை பதிவிட்டனர்.

# இந்த ஆண்டு இறுதிவரை 'எச் 1 பி' விசா வழங்குவதில் குலுக்கல் முறையே தொடருமென அமெரிக்கா அறிவிப்பு

அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறாமல் அங்கு தங்கியிருந்து வேலை செய்வதற்காக வெளிநாட்டினருக்கு அந்த நாடு 'எச்1 பி' விசா வழங்கி வருகிறது.

இந்த விசாவை உலக நாடுகளில் அதிக அளவு இந்தியர்களும், சீனர்களும்தான் பெற்று வருகின்றனர். குறிப்பாக ஐ.டி. என்றழைக்கப்படுகிற தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றுகின்றவர்கள் மத்தியில் இந்த விசாவுக்கு தனி செல்வாக்கு உள்ளது.

ஆண்டுக்கு 85 ஆயிரம் எச்1 பி விசா வழங்கப்படுகிறது. இதற்கு 2.25 லட்சத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பிக்கின்றனர். எனவே, குலுக்கல் முறையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு விசா வழங்கப்படுகிறது.

இதற்கிடையே, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தனது பதவியின் கடைசி காலத்தில் கடந்த மாதம் 7 ஆம் திகதி 'எச்1 பி' விசா நடைமுறையில் குலுக்கல் முறையை மாற்றி, விண்ணப்பிப்போரின் தகுதிக்கேற்ப மதிப்பெண் அடிப்படையில், விசா வழங்குவதற்கான நிர்வாக உத்தரவை பிறப்பித்தார். இந்த உத்தரவு வரும் மார்ச் 9 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக இருந்தது.

இந்நிலையில், தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் 'எச்1 பி' விசா மீதான ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கையை தாமதப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அதாவது எச்1 பி விசா வழங்குவதில் இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை குலுக்கல் முறையே தொடரும் என ஜோ பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# சீனாவில் 2 ஆவது உள்நாட்டு கொரோனா தடுப்பூசிக்கு ஒப்புதல்

சீனாவில் அரசுக்கு சொந்தமான சினோபாம் நிறுவனம் தயாரித்துள்ள கொரோனாத் தடுப்பூசி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. தற்போது இரண்டாவது உள்நாட்டு தடுப்பூசி மருந்தான கொரோனாவாக் தடுப்பூசியை பொதுமக்களுக்கு பயன்படுத்தவும், சில நிபந்தனைகளுடன் சந்தைப்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சினோவாக் பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ள கொரோனாவாக் தடுப்பூசி மருந்தை மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இந்த பரிசோதனையில் நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்திறன் நிரூபிக்கப்பட்டதையடுத்து, முதற்கட்டமாக அவசர தேவைகளுக்கு பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கொரோனாத் தடுப்பூசி திட்டத்தில் கொரோனாவாக் தடுப்பூசி சேர்க்கப்பட்டு, தொற்று ஆபத்து அதிகம் உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனைகளில் மருந்தின் செயல்திறன் மற்றும் பாதுகாப்புத்தன்மை உறுதி செய்யப்பட்டதால், கொரோனாவாக் தடுப்பூசியை பொதுமக்களுக்கு பயன்படுத்த சீனாவின் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

வெளிநாடுகளில் நடைபெற்ற மூன்றாம் கட்ட பரிசோதனை முடிவுகளை சினோவாக் நிறுவனம் இன்னும் வெளியிடாத நிலையில், பிரேசில், இந்தோனேசியா, துருக்கி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் அந்த நிறுவனத்தின் தடுப்பூசியை அவசர கால தேவைகளுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஞானஸ்தானம் கொடுக்கப்பட்ட 2 மாதக் குழந்தை உயிரிழப்பு

## பாதிரியார் மீது கொலை வழக்கு



ருமேனியாவில் ஞானஸ்தானம் கொடுக்கப்பட்ட 2 மாதமே ஆன குழந்தை உயிரிழந்ததால் பாதிரியார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்நாட்டில் ஒரு தேவாயத்தில் 2 மாத குழந்தைக்கு ஞானஸ்தானம் கொடுப்பதற்காக பாதிரியார் 3 முறை தண்ணீரில் வேகமாக முக்கி எடுத்துள்ளார்.

இதனால் சற்று நேரத்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு குழந்தை உயிரிழந்தது. இதனையடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்தால் குழந்தையின் நுரையீரலில் அதிகம் தண்ணீர் இருப்பது தெரிய வந்தது.

# மியன்மாரில் இணைய முடக்கம் டுவிட்டர் நிறுவனம் கண்டனம்

மியன்மாரில் ராணுவத்திற்கும் அந்த நாட்டு அரசிற்கும் மோதல் போக்கு நீடித்துவந்த நிலையில் ஆட்சியை ராணுவம் கைப்பற்றியது. அங்கு போராட்டங்கள் பரவுவதை தடுக்கும் வகையில் வரும் 7 ஆம் திகதி வரை பேஸ்புக் பயன்பாட்டுக்கு மியன்மார் ராணுவம் தடைவிதித்தது. இதன்படி அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு இணையதள சேவை வழங்குநர்களால், முகப்புத்தகச் சேவைகளுக்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம், மெசஞ்சர் சேவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த சூழலில் டுவிட்டர் சேவையும் மியன்மாரில் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியானது. முன்னதாக மியன்மாரில் நடக்கும் ராணுவ ஆட்சிக்கு எதிராக பல்வேறு டுவிட்டுகளை உருவாக்கி லட்சக்கணக்கான பதிவுகள் டுவிட்டரில் வெளியாகி வந்தன. இதுதொடர்பாக அந்நாட்டு தகவல் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சகம் வெளியிட்ட ஆவணங்களில், போலியான செய்திகளை பரப்பி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முக்கிய கருவியாக டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் பயன்படுத்தப்படுகிறது. இதனால், நாட்டின் பொது நிலைத்தன்மையை கருத்தில் கொண்டு மறு அறிவிப்பு வரும் வரை டுவிட்டர் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது என்று தெரிவித்ததாக தகவல் வெளியானது.

இந்நிலையில் மியன்மாரில் ஆங் சான் சூகி மற்றும் தலைவர்களை கைது செய்து சிறை வைக்கப்பட்டுள்ள சம்பவத்திற்கு பிறகு, மியான்மரில் தொடரும் இணைய சேவைகள் முடக்கத்திற்கு டுவிட்டர் நிறுவனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

# ஆயுதப் போராட்டத்தால் அடையமுடியாததை ஜெனிவா ஊடாக அடைய புலிகள் முயற்சி!

## மொஹமட் முஸம்மில் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில் அடைய முயற்சித்த இலக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை பிரேரணைகள் ஊடாக புலம் பெயர்அமைப்புக்களுக்குபெற்றுக்கொடுக்க முயற்சிக்கிறது.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல் குற்றங்கள் இடம் பெறவில்லை என்பதற்கான தகுந்த ஆதாரங்களை அரசாங்கம் மனித உரிமை கூட்டத்தொடரில் பகிரங்கப்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இம்மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும். மனித உரிமை ஆணையாளர் இதுவரை இராணுவத்தினருக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

ஆனால் தற்போது அரசாங்கத்துக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளார். இலங்கை தொடர்பில் அவர் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கை நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

30 வருடகால யுத்தம் முழு நாட்டுக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. பாரிய போராட்டத்துக்கு மத்தியில் யுத்தம் 2009 மே மாதம் 19 ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

2009 மே மாதம் 27 ஆம் திகதி இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முதலாவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தை பொறுமையாகக் கையாண்டார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராயும் 5 சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கி மெக்ஷ்வெல் பரணகம ஆணைக்குழுவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

2014. பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல் குற்றங்கள் ஏதும் இடம் பெறவில்லை என்றும்.சர்வதேச யுத்த கோட்பாடுகளுக்கு அமைய யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட்டுள்ளது என்றும் பரணமக ஆணைக்குழுவின் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் உள்ள தவறான நிலைப்பாட்டைத் திருத்த அரசாங்கம் முயற்சித்த வேளை 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

கடந்த அரசாங்கம் புலம்பெயர் அமைப்புக்களுக்கும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் முன்னுரிமை வழங்கியது. இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 30/1 பிரேரணைக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரச தலைவர்களுக்கும், நாடாளுமன்றுக்கும் அறிவிக்காமல் இணையனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் சர்வதேச அமைப்புக்களின் நோக்கங்கள் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுத்தப்பட்டன.

அரசியல் நோக்கங்களைக் கொண்டு பாதுகாப்பு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் சிறைப்படுத்தப்பட்டார்கள். நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டமையால் கடந்த அரசாங்கத்தை மக்கள் புறக்கணித்தார்கள்.

நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சர்வதேச அமைப்புக்களுக்கு அடிபணியப் போவதில்லை என்று ஜனாதிபதி தெளிவாகவும், அழுத்தமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகிக் கொண்டமை முதற்கட்ட செயற்பாடாகும். இந்த மாதம் இடம் பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாகக் காணப்படும்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினர் ஆயுமேந்தி போராடியதன் இலக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் பிரேரணைகள் ஊடாக புலம்பெயர் அமைப்புக்களுக்கு பெற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார்.

யுத்தக்குற்றங்கள் இடம்பெறவில்லை என சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் மனித உரிமை ஆணையாளர் கவனம் செலுத்தவில்லை. குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை இம்முறை அரசாங்கம் பகிரங்கப்படுத்தும். - என்றார்.

# கந்தளாயில் விபத்து ஒருவர் பரிதாப சாவு!

திருகோணமலை - கந்தளாய் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த நபரொருவருடன் லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த சேனக்க திஸாநாயக்க என்ற 43 வயதுடைய வாய்பேச முடியாத ஒருவரே இவ்வாறு விபத்துக்குள்ளானார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் லொறியின் சாரதியை கைது செய்துள்ளனர் எனவும் விபத்து தொடர்பான விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர் போதைக்கு அடிமையாவதைத் தடுக்க விசேட செயற்றிட்டம்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றமையைத் தடுப்பதற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சும், கல்வி அமைச்சும் ஒன்றிணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்தத் தீர்மானித்திருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றமையைத் தடுப்பதற்கான திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

நாட்டில் தற்போது 90 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் பேர் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலைமைக்குப் பிரதான காரணம் இளம்வயதினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றமையே.

இந்நிலையில் இளம் வயதினரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்பதென்றால், பாடசாலை மட்டத்திலிருந்தே அவர்களுக்கு போதைப் பொருள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலை மட்டத்தில் ஒன்றிணைந்த வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த முடிவெடுத்துள்ளது.

இதன்போது இந்த செயற்பாடுகளுக்கு சாரணியர் அமைப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அமைப்பினரும் மற்றும் தேசிய மாணவர் படையணியும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், அமைச்சின் செயலாளர் ஓய்வுப்பெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன, கல்வி அமைச்சின் உறுப்பினர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர், சாரணியர் அமைப்பினர் மற்றும் தேசிய மாணவர் படையணியினரும் இணைந்துக்கொண்டிருந்தனர்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1986.05.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - சுவாதி
சூ/செவ் - -----
பாவம் - 31 1/2
கல்வி - Engineering
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Engineer OR Doctor

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1985.02.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - மூலம்
செவ் - ------
பாவம் - 46 1/2
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - அரச தொழில்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# தமிழ்பேசும் சமூகத்தின் வீறுகொண்ட பேரெழுச்சி!














பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான மாபெரும் பேரணி, நான்காம் நாளான இன்று வவுனியாவிலிருந்து மன்னாரைச் சென்றடைந்தது. இதில் பெருந்திரளான தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் பங்கேற்றனர்.

# ‘குருந்தகம’ என்பது குருந்தூர் மலையாகியுள்ளது வடக்கு கிழக்கு முழுவதும் பௌத்த மரபுரிமைகள்!

## எல்லாவல மேதானந்த தேரர் இப்படி வியாக்கியானம்

‘குருந்தகம’ என்பதே தற்போது குருந்தூர் மலையாகியுள்ளது. இதனை எம்மால் நிரூபிக்க முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற தொல்பொருள் முக்கியத்துவமுடைய ஸ்தானங்களில் 99 வீதமானவை பௌத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவையாகும் என்று எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

குருந்தூர்மலை பௌத்த மரபுரிமை என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதனை தேசிய உரிமையான அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். மாறாக, வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் இதனைத் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக வீண் பிரச்சினையாகக் கூடாது என்றும் எல்லாவல மேதானந்த தேரர் கூறினார்.

குருந்தூர்மலை உள்ளிட்ட தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இணைய வழியூடாக நடைபெற்றது. இதன் போதே தேரர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கில் காணப்படும் ஆயிரக்கணக்கான தொல்பொருள் ஸ்தானங்கள் தொடர்பில் நான் பல சந்தர்ப்பங்களில் ஆராய்ந்திருக்கின்றேன்.

அவற்றில் 99 சதவீதமானவை பௌத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவையாகும். இவ்வாறிருக்க குருந்தூர் மலை விவகாரத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் தவறான நிலைப்பாடுகளை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ளனர்.

‘குருந்தகம’ என்ற இடமே தற்போது குருந்தூர் மலையாகியுள்ளது. நான் இந்த இடத்துக்கு மூன்று தடவைகள் சென்றிருக்கின்றேன். முதன்முறையாக அங்கு சென்ற போது தமிழ் மக்கள் எவ்வித பேதமும் இன்றி எம்மை வரவேற்றனர்.

அவர்களுடன் எந்தப் பிரச்சினையும் காணப்படவில்லை. அங்கு சென்று ஆராய்ந்தபோது அதிகளவான தொல்பொருள் சான்றுகளைக் கொண்டவொரு இடமாக அது இனங்காணப்பட்டது.

1905 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஒருவரால் செய்யப்பட்ட ஆய்விலும் இது பௌத்த மரபுரிமைக்குரியது என்பது நிரூபிக்கப்பட்டது. இதனைப் போன்று பல ஆங்கிலேயர்களால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிலும் இது பௌத்த மரபுரிமைக்குரியது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த இடத்துக்கு நீண்ட வரலாறு உள்ளது. அத்தோடு பொலன்னறுவை இராசதானி காலத்தில் பௌத்த மன்னர்களால் இந்த இடம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன.

எனவே குருந்தூர் மலை என்ற குருந்தகம பௌத்த விகாரை என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களில் காணப்படுகின்ற மலைகள் பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவற்றில் பல விகாரைகள் இடிக்கப்பட்டு கோவில்கள் கட்டப்பட்டுள்ளன.

வவுனிக்குளம், கனகராயன்குளம், ஒட்டுசுட்டான், மருதனார்குளம், கோணேஷ்வரம் உள்ளிட்டவையும் பௌத்த விகாரைகளை அகற்றி அமைக்கப்பட்டுள்ளன.

எனினும் அவற்றை உடைக்குமாறு எந்த சந்தர்ப்பத்திலும் நாம் கூறுபவன் அல்லன். பொலன்னறுவையிலும் இது போன்று அமைக்கப்பட்டுள்ள சிவன் கோவிலை நாம் பாதுகாத்து வருகின்றோம். காரணம் இவை தேசிய உரிமைகளாகும்.



குருந்தூர்மலை பௌத்த மரபுரிமை என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதனைத் தேசிய உரிமையான அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும்.

மாறாக, வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் இதனைத் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக வீண் பிரச்சினையாக்கக் கூடாது. அப்பாவித் தமிழ் மக்களுக்கு இதில் எவ்விட தொடர்பும் இல்லை. இதில் எவ்வித இன மத பேதமும் கிடையாது. - என்றார்.

# 2020 இல் பால்மா இறக்குமதி வீழ்ச்சி; 50 பில்லியனுக்கும் அதிகமான சேமிப்பு!

கொழும்பு, ஜன.06

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து பால்மாவை இறக்குமதி செய்யாமல் கிட்டத்தட்ட 50 பில்லியனுக்கும் அதிகமான தொகையை சேமிக்க முடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவல் நிலை காரணமாக கடந்த ஆண்டில், குறைந்த அளவிலான பால்மாவை மட்டுமே இலங்கை இறக்குமதி செய்துள்ள நிலையில் சமீபத்திய சுங்க தரவுகளின்படி இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று மனிதகுலத்துக்கும் பொருளாதாரத்துக்கும் பாரிய தாக்கத்தை செலுத்தியிருந்தாலும் எதிர்பார்த்ததை விட விரைவில் தேசிய பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடிந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2022 இல் இலங்கையில் எந்த பால்மா இறக்குமதியும் இருக்காது என்றும் அதற்குள் பால்மா துறையில் உள்ள முறையை மாற்றி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தேசிய பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, அரச மற்றும் தனியார் பிரிவு விவசாயிகளை இணைத்துக் கொண்டு குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த செப்ரெம்பர் மாதம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த திட்டம் மொத்த உள்ளூர் தேவையை பூர்த்திசெய்வதை நோக்கமாகக் கொண்டு எட்டப்பட்ட அதேவேளை சிறு பால் பண்ணையாளர்களின் வருவாயை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

தற்போது, சிறிய அளவிலான சிறு பால் பண்ணையாளர்கள் தற்போதைய தேசிய பால் உற்பத்தியில் 85 வீதம் பங்கைக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவில் உயிரிழந்தோர் 70 வீதம் 60 வயதுக்கு மேல்!

## வைத்தியர் ஹரித அழுத்கே தகவல்

இலங்கையில் பதிவான கொரோனா மரணங்களில் 70 சதவீதமானவை 60 வயதுக்கு மேற்பட்டோரது மரணங்களாகும். எனினும், தொற்றுக்குள்ளான வீதத்தில் அந்த எண்ணிக்கை மிகக் குறைவாகும். எனவே, எதிர்வரும் காலங்களிலும் இதே போன்று முதியோர் தொற்றுக்குள்ளாகின்றமையை தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு 700 - 800 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கடந்த சில நாள்களாக பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு குறைவடைந்துள்ளதாலேயே தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. எனவே, தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றமையை அபாயம் குறைவடைவதாகக் கருத முடியாது.

அத்தோடு பெப்ரவரி மாத்தின் முதல் 5 நாள்களில் மாத்திரம் 20 மரணங்கள் பதிவாகியுள்ளன. கடந்த காலங்களில் கொரோனா மரணங்கள் கொழும்பையும், மேல் மாகாணத்தையும் மாத்திரமே நிலைகொண்டிருந்தன. ஆனால், தற்போது ஏனைய பல மாகாணங்களிலும் மரணங்கள் பதிவாக ஆரம்பித்துள்ளன. இந்த அபாய நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு செயற்படாவிட்டால் 2021 ஆம் ஆண்டு 2020 ஐ விட பாரதூரமானதாகும்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது. நாடளாவிய ரீதியில் 40 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களை தொடர்ச்சியாக கண்காணிப்பது இலகுவானதல்ல. எனவே, தனிமைப்படுத்தல் முறைமைகள் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும்.

தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் இரண்டரை லட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்குவதற்கு இரு வார காலம் தேவைப்படுகிறது. அவ்வாறிருக்கையில் முழு சமூகத்திற்கும் தடுப்பூசி எவ்வாறு வழங்கப்படும் என்பதை தற்போதிலிருந்தே திட்டமிட வேண்டும்.

நாட்டில் இனங்காணப்பட்டுள்ள 67 ஆயிரம் தொற்றாளர்களில் 90 வீதமானோர் 60 வயதிற்கு குறைந்தவர்களாவர். எஞ்சிய 10 வீதமே 60 வயதுக்கு மேற்பட்டோராவர். ஆனால் மரணங்களின் அடிப்படையில் அவதானிக்கும் போது 70 வீதமானவை 60 வயதுக்கு மேற்பட்டோரின் மரணங்களாகும். எவ்வாறிருப்பினும் முதியோர் மத்தியில் வைரஸ் தொற்று பரவுவதற்கு இடமளிக்காமலுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்றார்.

# தமிழரின் நலன்களை நிறைவேற்றுவது இலங்கையின் எதிர்காலத்துக்கு சிறப்பு!

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை

ஐக்கிய இலங்கைக்குள் நீதி சமாதானம் சமத்துவத்துக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது இலங்கையின் நலன்களுக்கு உகந்த விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தலைவர்களை கடந்த மாதம் சந்தித்தவேளை நல்லிணக்க முயற்சிகளுக்கான இந்தியாவின் ஆதரவை வெளியிட்டதாக ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகம் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினரின் அபிலாஷைகளுக்கு இடமளிக்கும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முயற்சிகளில் இந்தியா அனைத்து மட்டங்களிலும் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.



ஐக்கிய இலங்கைக்குள் நீதி சமாதானம் சமத்துவத்துக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது இலங்கையின் நலன்களுக்கு உகந்த விடயம். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உட்பட அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு தொடர்பாகவும் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கும் இது பொருந்தும் எனவும் ஜெய்சங்கர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2021இல் வெளியிடப்பெற்றது.